IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 46/2015

Deposition of Witness : DW 1

Name : விஜயராகவன் (வயது – 38)

Father's Name /W/o : த/பெ குருசாமி

Religion : இந்து

Calling : –

Address : சென்னை.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 05.02.2026.

## 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் ரயில்வே துறையில் எத்தனை ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன் என்றால் 13 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன். வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மத்திய நிர்வாக தீர்ப்பாயம் அளித்த உத்தரவு என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் இந்த வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளை சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1 ஆம் பிரதிவாதி பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி வழக்கு 2021 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு 2023 ஆம் ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.46/2015 வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் உள்ளபோது மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்தது சரியா தவறா என்றால் தவறு. நாகப்பனின் மனைவி முனியம்மாள் தற்போது குடும்ப ஓய்வூதியத்தை பெற்று வருகிறார் என்றால் சரிதான்.

3. 1 ஆம் பிரதிவாதி MC.1/1993, OS.120/2005 ஆகிய வழக்கிற்கான உத்தரவை ரயில்வே துறையில் சமர்ப்பித்தாரா என்றால் சமர்ப்பித்துள்ளார். MC.1/1993 வழக்கில் நாகப்பனின் மகள் அமுல் என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் தெரியாது. மேற்படி வழக்கின் உத்தரவு அமுல் என்ற பெயர் குறிப்பிட்டுள்ளது அதற்கான நகல் என் துறையில் சமர்ப்பிக்கபட்டுள்ளதா என்றால் அமுல் குறிப்பிட்டுள்ளது என்று எனக்கு தெரியாது.

4. அலுவலக கோப்புகளை பார்க்கும்போது 1975 ஆம் ஆண்டில் நாகப்பனுக்கும் முனியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். ரயில்வே துறையில் பணியாற்றும் பணியாளர் காலமானால் அவரின் ஓய்வூதியம் அவரின் மனைவிக்கு தான் வழங்கப்படும் என்றால் சரிதான். நாகப்பன் மனைவி முனியம்மாள் சட்டப்படி குடும்ப ஓய்வூதியத்தை பெற்று வருகிறார் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரிதான். நாகப்பன் உயிருடன் இருந்த காலத்தில் எங்கள் துறையில் விசாரணைப்படி முனியம்மாள் (1 ஆம் பிரதிவாதி) தான் அவர் மனைவி என்று ஒப்புக்கொண்டார் என்றால் சரிதான். முனியம்மாள் தான் நாகப்பனின் சட்டப்படி மனைவி என்பதால் வாதிக்கு உரிய பரிகாரம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**